Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.12/2026

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சுந்தர்ராஜ் | Occupation | விவசாயம் |
| Father's name | அழகர்சாமி | Calling | |
| Village | மங்காபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026.

24.03.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது மங்காபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மகன் ஆவார். கடந்த 15.07.2022 அன்று எனது மகன்களான முருகேஸ்வரன் மற்றும் இவ்வழக்கின் எதிரி முனீஸ்வரன் ஆகியோர் எனக்கு போன் செய்து விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். அது தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து மட்டும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–

கடந்த 15.07.2025 அன்று எனது மூத்த மகனான இவ்வழக்கின் எதிரி மதியம் 02.45 மணியளவில் சிவகாசி ஹவுசிங் போர்டுக்கு எனது 2வது மகன் முருகேசனை

கூட்டிகொண்டுவருவதாக கூறிவிட்டு எனது இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு சென்றதாகவும் பின்னர் சுமார் 03.45 மணியளவில் எனது மகன் முருகேஸ்வரன் எனக்கு போன் செய்து தானும் இவ்வழக்கின் எதிரியும் ஹவுசிங்க போர்டிலிருந்து கிளம்பி எனது இருசக்கர வாகனத்தில் இவ்வழக்கின் எதிரி ஓட்ட திருவில்லிபுத்தூர் டு சிவகாசி கீழமேல் மெயின்ரோட்டில் யாஸஸ் பள்ளி அருகே சென்றுகொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டியதில் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் மேற்படி பள்ளி அருகே உள்ள பாலத்தில் மோதியதில் இருவரும் தூக்கிவீசப்பட்டு இருவருக்கும் காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அருகிலிருந்தவர்கள் அனுப்பிவைத்ததாகவும் பின்னர் நானும் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது இருவரும் காயம் ஏற்பட்டு சிகிச்சையிலிருரந்ததாகவும் பின்னர் எனது மகன்கள் இருவரையும் மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் விபத்து குறித்து 17.07.2025 அன்று அரசு மருத்துவமனைக்கு வந்திருந்த மல்லி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.12/2026

**Depositions of PW- 2**

| Name | **திரு.முருகேஸ்வரன்** | Occupation | |
|---|---|---|---|
| Father's name | சுந்தர்ராஜ் | Calling | |
| Village | மங்காபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026.

24.03.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மங்காபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லூரியில் முதலாமாண்டு படித்து வருகிறேன். அசா.1 எனது அப்பா ஆவார். இவ்வழக்கின் எதிரி எனது அண்ணன் ஆவார். கடந்த 15.07.2025 அன்று மாலை 04.00 மணியளவில் நானும் எனது அண்ணனும் எனது அப்பாவின் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது மணல் சறுக்கியதில் நாங்கள் இருவரும் கீழே விழுந்ததில் எனக்கும் எனது அண்ணனுக்கும் காலில் காயங்கள் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் எங்கள் இருவரையும் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக விருதுநகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு வைத்து எனக்கும் இவ்வழக்கின் எதிரிக்கும் அறுவை சிகிச்சை செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

போலீசார் என்னை விசாரித்தபோதும் மேற்படி சங்கதிகளைத்தான் கூறினேன் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.